பொது நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் [illegible]

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (13-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 239

# ஐ. தே. கட்சி எம். பிக்கள் 41 பேர் யாழ்ப்பாணம் வருவதற்குத் தயார்!

## ஆனால் பத்திரிகையாளர்கள் வர அனுமதிக்க வேண்டும் என நிபந்தனை

கொழும்பு, ஒக்ரோபர் 13

யாழ்ப்பாணத்துக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளை நேரில் அறிவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாற்பத்தொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கு அவர்கள் ஒரு நிபந்தனையை விதித்திருக்கின்றார்கள்.

தாம் அங்கு விஜயம் செய்வதற்கு முன்னர்; பத்திரிகையாளர்கள் அங்கு சென்று சுதந்திரமாக நடமாடி—

தகவல்களைத் திரட்டி செய்தி வெளியிட அனுமதிக்கப்பட வேண்டும் - என்பதே அந்த நிபந்தனையாகும்.

இராணுவச் செய்திகள் பற்றிய தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து —

எதிர்க்கட்சியினர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிட வேண்டும் என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அழைப்பு விடுத்தது தெரிந்ததே.

இராணுவச் செய்திகள் மீதான தணிக்கை நீக்கப்பட்டால் தாம் யாழ்ப்பாணம் செல்லத் தயார் என்று ஐ. தே. கட்சியினர் கூறியிருந்தனர் —

இப்போது செய்தித் தணிக்கை நீக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். தேவை என்றா நானும் பாதுகாப்புக்கு வருவேன் — என்று அமைச்சர் ரத்வத்தை கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி - கல்முனைப் பிரதேசத்தில் மக்கள் நடமாட்டத்துக்குத் தடை

கொழும்பு, ஒக். 13

பூநகரி பிரதேசத்தில் இராணுவ முகாம் அமைந்திருந்த இடத்தில் இருந்து மட்டுவில் நாடுப் பிரதேசம் முதல் கல்முனைத்துறை வரையான முழுமையான தரைப்பகுதியும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு பொதுமக்கள் நடமாடத் தடை செய்யப்பட்டுள்ளது — என படையினர் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் இப்பிரதேசத்தினுள் நுழைவது, நடமாடுவது மற்றும் வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் —

இந்த உத்தரவைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்குமாறும் — பாதுகாப்புப்படையினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## குடாநாட்டில் கைதான 88 பேருக்கு வீரவில முகாமில் புனர்வாழ்வு

### பெற்றோருக்குக் கடிதம் எழுத வசதி செய்யப்படுமாம்

கொழும்பு, ஒக். 13

யாழ். மாவட்டத்தில் அண்மையில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட 88பேர் தென்பகுதியில் உள்ள வீரவில முகாமுக்கு கொண்டு வரப்பட்டு அங்கு அவர்களுக்குப் புனர் வாழ்வளிக்கப் படுகிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் லக்ஷ்மன் சில்வா இதனைத் தெரிவித்தார்.

அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுமா? என்று கேட்டதற்கு, அவர்களுக்கெதிராக சிறு சிறு குற்றச்சாட்டுக்கள் மட்டுமே உள்ளன, இதனால் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது என புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த இளைஞர்களை அவர்களின் பெற்றோர் சென்று பார்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன என்றும் —

கொழும்பில் இருந்து நீண்ட தூரம் திஸ்ஸமஹராம, யால காட்டுப் பகுதியில் அமைந்திருக்கும் இம் முகாமுக்குச் செல்வதற்கு இவர்களின் பெற்றோர் கடும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் — கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

முகாமில் சகலவிதமான வசதிகளும் கொடுக்கப்பட்டுள்ளதால் இந்தக் கைதிகளுக்கு தேவை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இவர்கள் பெற்றோருக்கு [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகால சட்டவிதிகள் தளர்வு?

கொழும்பு, ஒக். 13

அவசரகாலச் சட்டவிதியின் சில சரத்துக்கள் தளர்த்தப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளதாக லங்காதீப பத்திரிகை தெரிவிக்கிறது.

பாதுகாப்புப் படையினரால் அல்லது பொலீசாரால் கைது [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

கொழும்பு, ஒக் 13

மட்டக்களப்பு மாவட்ட, பெரிய நீலாவணையில் சுற்றி வளைத்துத்தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட விசேட அதிரடிப் படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

படையினர் திருப்பித் தாக்கியதில் புலி உறுப்பினர் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் படையினர் தரப்பில் இழப்பு எதுவும் இல்லை என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இச் சம்பவத்தில் மூன்று குடிமக்கள் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## அம்பாறையில் மோதல்

அம்பாறை மாவட்டத்தில் துறைவடியாமடு என்ற இடத்தில் விசேட அதிரடிப்படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் காயம் அடைந்தார் என்றும் சிவிலியன் ஒருவரும் காயமடைந்தார் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

காயமடைந்தவர்கள் கல்முனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டது (இ- 3)

## ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளர் திடீரென இராஜினாமா!

ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளர் விக்ரர் பெர்னாண்டோ தமது பதவியிலிருந்து திடீரென இராஜினாமாச் செய்துள்ளார்.

பத்திரிகைச் செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்ததாகவும் இதற்கு அவர் மேற்கொண்ட சில நடவடிக்கைகளே காரணம் எனவும் வதந்திகள் பரவியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் இராஜினாமாச்செய்துள்ள இரண்டாவது பத்திரிகைச் செயலாளர் விக்ரர் பெர்னாண்டோ ஆவார். (இ-1)

## வடக்கில் நடக்கும் போரால் கிழக்கு பாதுகாப்பு தளர்வு

வடக்கில் நடைபெறும் போரினால் கிழக்கில் பாதுகாப்பு நிலை சற்று தளர்ந்துவிட்டதாக பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்—

கிழக்கில் ஏறாவூர், கிண்ணியா முதலான இடங்களில் உடனடி பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும்—

இந்தப் பிரதேசங்களில் முழுமையான பாதுகாப்பற்ற நிலை தோன்றுவதற்கு முன்னர் ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ)

## செங்கலடியில் ரெலோவின் ஆயுதம் பறிக்கப்பட்டது ஏன்?

### கொலை ஒன்றே காரணமாம்

செங்கலடிப் பிரதேசத்தில் செயற்பட்டு வந்த ரெலோ உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டதற்கு முஸ்லிம் வாலிபர் ஒருவர் கொலையுண்டதே காரணம் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சீனிமுஹம்மது மீராசாஹித (வயது 28) என்ற இந்த முஸ்லிம் வாலிபர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக சந்தேக நபர்களான பூபால பிள்ளை சங்கர் (அலெக்ஸ்), தர்மலிங்கம் சிவா (ரவி) ஆகியோர் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைகளில் பெரும் இடநெருக்கடி

கொழும்பு, ஒக். 13

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது—

கடந்த 5 ஆண்டுகளில் குற்றச் செயல்களுக்காக தண்டிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டதற்குக் காரணமாகும் என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர் எச் எம். அஸ்வர் கேள்வி எழுப்பினார்.

அவரின் கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

உள்ளூர் சிறைச்சாலைகளில் இடநெருக்கடி பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேலும் பல சிறைச்சாலைகள் நிறுவப்படவுள்ளன.

கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்படுகிறது.

சிறைச்சாலைகளில் விளக்கமறியல் கைதிகளும், தண்டனை பெற்ற குற்றவாளிகளும் ஒன்றாக வைக்கப்படமாட்டார்கள்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் தமிழர்களும், புலிகளும் தனித்தனியான சிறைக்கூடங்களிலேயே வைக்கப்படுவார்கள் — என்றார். (இ-3)

### அராலி, வட்டு. பகுதியில்

## கட்டாக்காலிகளால் வயல்களில் பயிர் அழிவு

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் பெரும்போக செய்கையை மேற்கொண்டுள்ள வயல்களில் இரவு வேளைகளில் கால்நடைகள் புகுந்து அழிவை ஏற்படுத்துகின்றன.

மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் இக் கால்நடைகளிடமிருந்து வயல்களை பாதுகாக்க முடியாது திண்டாடுகின்றனர். (இ-12)

## வழுக்கை ஆற்றை புனரமைக்கக் கோரிக்கை

காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளூடாகச் செல்லும் வழுக்கை ஆற்றின் வாய்க்கால் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அத்துடன் அதனோடு தொடர்புடைய சகல குளங்களும் ஆழமாக்கப்பட வேண்டும்.

அண்மையில் வலி. தென்மேற்குப் பகுதியிலுள்ள விவசாயிகளைச் சந்தித்து அவர்களுடைய குறைபாடுகள், தேவைகள் குறித்துக் கேட்டறிய வந்திருந்த யாழ். அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகள் ஆகியோரிடம் மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சட்டுடை திரு. க. முதலியார் வீட்டில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது அப்பகுதி விவசாயிகள் இவர்களிடம் முன்வைத்த மற்றும் சில முக்கிய கோரிக்கைகள் வருமாறு:

★ தருவிக்கப்படவுள்ள விதை நெல் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

★ அமோனியம் சல்பேற், யூரியா போன்ற உரவகைகளையும் கட்டுப்பாட்டு விலையில் வழங்க வேண்டும்.

★ அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தை விரைவாக விமானம் மூலமாவது சந்தைப்படுத்த வேண்டும்.

★ கோழிக்குஞ்சுகள், கால்நடைகளை இலவசமாக வழங்க வேண்டும். (இ-4-))

## போலி மருந்து தெளிக்கும் மோசடி குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஒக். 13

கோண்டாவில் பகுதியில் போலி மருந்து தெளிக்கும் நபர் ஒருவர் நடமாடுகிறார். இது குறித்து பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு கோண்டாவில் பகுதி சுகாதாரக் குழு தெரிவிக்கிறது.

இந்த நபர் அண்மைக் காலங்களில் கோண்டாவில் மத்தி, கோண்டாவில் மேற்குப் பகுதிகளில் நுளம்பு ஒழிப்பு மருந்து, பூச்சி அழிப்பு மருந்து என்று கூறி வீடுவீடாகச் சென்று 'போலி' மருந்தை விசிறி அதற்காகப் பணமும் பெற்று வருகிறார் என்றும் —

இதற்காக முன்னர் மலேரியா மருந்து விசிறிய தெளிகருவியை அவர் பயன் படுத்துவதால் இக்கருவியைக் கண்டதும் சுகாதாரப் பகுதியால் வந்தவரெனக் கருதி பலர் மருந்து விசிற அனுமதிப்பதாகவும் சுகாதாரக் குழு தெரிவிக்கிறது. (இ-4)

## ஆசிரியர் பயிற்சி நிலையம்

திருகோணமலை, ஒக். 13

வடக்கு—கிழக்கு மாகாண கல்வியமைச்சு எதிர்வரும் ஜனவரி முதல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தவுள்ளது என்று மாகாண கல்வியமைச்சு செயலாளர் திரு சு. டிவகலாலா தெரிவித்தார்.

அதற்கு முன்னோடியாக ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் பாடரீதியான பட்டறைகள் நடத்தப்படவுள்ளன என்றும்—

அதில் இனங்காணப்படும் செயற்திட்டங்கள் நடைமுறைக்கு வரும் என்றும்— அவர் தெரிவித்தார். (இ-3)

## தமிழ் நாட்டில் 60 சதவீத வாக்களிப்பு

சென்னை, ஒக். 13

தமிழகத்தில் நேற்று அமைதியான முறையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் 60 சதவீதமானவர் வாக்களித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சென்னை நகராட்சி மன்ற தேர்தலின் கள்ள வாக்கை ஆளும் கட்சி பாவிப்பதாகக் கூறி, அதற்குக் கண்டனம் தெரிவித்து ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியும், மேயர் பதவிக்குப் போட்டியிடும் சந்திரலேகாவும் பொலீஸ் கமிசன் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். (இ-3)

## சுருக்கெழுத்துப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 13

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரியில் ஒரு வருடகால தமிழ் சுருக்கெழுத்தாளர் பயிற்சி நெறியினை ஆரம்பிக்கவுள்ளது. 18-25 வயதிற்குட்பட்ட, பாடசாலையை விட்டு விலகிய இருபாலாரும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கரவெட்டி பருத்தித்துறை வான் சேவை

வடமராட்சி, ஒக். 13

கரவெட்டி- பருத்தித்துறை தட்டிவான் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அரணுக்கு வெளியே வாழும் கரவெட்டிப் பகுதி மக்கள் இச் சேவையினால் பயனடைந்துள்ளனர்.

தினமும் காலை கரவெட்டி, குடவத்தையிலிருந்து கலிகைச் சந்தி, நெல்லியடி, மந்திகை ஊடாக பருத்தித்துறைக்கும், நண்பகலில் பருத்தித்துறையிலிருந்து குடவத்தைக்கும் இதே பாதை ஊடாக தட்டிவான் சேவை நடைபெற்று வருகிறது.

இதே நேரம், கரவெட்டி, சாமியன் அரசடியிலிருந்து கலிகைச்சந்தி, துன்னாலை, மந்திகை ஊடாக பருத்தித்துறைக்கு பாடசாலை தட்டிவான் சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேவையில் ஈடுபடும் தட்டிவான்கள் நெல்லியடி, மந்திகை ஆகிய பாதுகாப்பு அரண் [illegible] ஊடாகச் சென்று வருவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். (இ-173)


பிரத்தியேக வகுப்புகள்

றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

( ஜோண் பொஸ்கோ முன்பாக )

**கணக்கியல் A/L 98**

ஆரம்பம்: **14 - 10 - 1996**

பி. ப. 4.15 – 5.15

குறிப்பு: ★ ஒரு பிரிவு மட்டுமே ஆரம்பிக்கப்படும்.

★ வரையறுக்கப்பட்ட மாணவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

ஆசிரியர்: திரு. S. D. J சுதர்ஷன்

( ஏனைய விஞ்ஞான, கலை, வர்த்தக, ஆங்கில, சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன )

(43158)



மானிப்பாய் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்

**கலைமகள் விழாவும் நூல்நிலைய அறிமுக விழாவும்**

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், இவ்வாண்டு வெகுசிறப்பாக கலைமகள் விழாவையும் நூல்நிலைய அறிமுகவிழாவையும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்களும் இணைந்து கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்து, தங்கள் வருகையையும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றது.

இடம்:- நூல்நிலையம்

காலம்:- **19-10-96** சனிக்கிழமை

நேரம்:- காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

தலைவர்:- திரு. C. கேசவராஜன்.
(அதிபர், தலைவர், பழைய மாணவர் சங்கம் )

பிரதம விருந்தினர்:-
கலாநிதி S. K. சண்முகநாதன் (யாழ். பல்கலைக்கழகம், உபதலைவர், பழையமாணவர் சங்கம்)

சொற்பொழிவு:-
சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை
(அதிபர் இளவாலை, மெய்கண்டான் ம. வி)
திரு. நா. பாலகிருஷ்ணன்
(ஆசிரியர், யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை )
திரு. வே. தம்பாபிள்ளை
உப அதிபர், யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி)

நன்றியுரை

மானிப்பாய் இந்துக்கல்லூரி நூல்நிலைய அபிவிருத்திக்கும், புனரமைப்புக்கும் எமது பழைய மாணவர் சங்க(அவுஸ்திரேலியக் கிளை) நிதி உதவி வழங்கி எம்மை ஊக்குவித்தது குறிப்பிடத்தக்கது.

ந. விவேகானந்தராஜா
கௌரவசெயலாளர்

இந்துக்கல்லூரி,
மானிப்பாய்

(43172)


## கண்ணீர் அஞ்சலி

09-10-96 அன்று அகால மரணமடைந்த எமது கழக உறுப்பினரும் கழகத் தலைவரின் சகோதரனுமாகிய

### இராசதுரை ஜெயசிவானந்தன்

(2 ஆம் வருட சித்தமருத்துவத்துறை மாணவன் யாழ் பல்கலைக்கழகம்)

அவர்களின் பிரிவால்துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் பரிஷ் லியோ கழகம்

(43174)

## மரண அறிவித்தல்கள்

### பண்டிதர் க. வீரகத்தி

பண்டிதர் க. வீரகத்தி 10-10-96 இல் சென்னையில் காலமானார். இவர் காலஞ்சென்ற நாகம்மா ஆசிரியையின் கணவரும், சேந்தன், சாந்தா, வசந்தன், வசந்தா, அஜந்தா ஆகியோரின் தந்தையும், எழிலரசி, சண்முகநாதன், லதா, சிறீதரன், ஜெயக்குமார் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் சென்னையில் நடைபெற்றன.

தகவல்:
வீ. சேந்தன

இல. 16, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (43171)

### திருமதி பூமணி வைத்திலிங்கம்

சாவகச்சேரி சிவன்கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட பூமணி வைத்திலிங்கம் 11- 10- 96இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி (ஓமந்தை), பரஞ்சோதி (அம்பாள் களஞ்சியம், சாவகச்சேரி) கமலாம்பிகை, நாகேஸ்வரி, சிவராசா (சிவா றேடிங்கோ, சாவகச்சேரி), சிவபாலன் (லண்டன்), சிவகுமாரன் (சுவிஸ்), சிவஞானதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், வேலுப்பிள்ளை (வேலவன் ஸ்ரோர், ஓமந்தை), லோகேஸ்வரி, அருட்சோதி (சோதி தேநீர்ச்சாலை, சாவகச்சேரி), மல்லிகா (ஆசிரியர், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம்) தம்பையா, (சிவன் ஸ்ரோர், சாவகச்சேரி) ஆகியோரின் மாமியாரும், றயனி. றாஜி. ரூபி, உமா, சுபிதா, கிருஸ்ணதாஸ், நவீனன், விஜிதா, துஜிதா, பாமினி, அருட்குமார், அஜந்தா, அஜந், கிஜிதன், கயந்தினி, வினோ, சர்மினி, ஜெனார்த், நிறோயினி, சஞ்சியா, கயானா, சஜீவன், கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கபிலன், பிரசாந்தன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் (ஓமந்தை) தங்கையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. சிவயோகன்
(சிவா றேடிங்கோ)

சிவன் கோயிலடி,
சாவகச்சேரி. (43159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச...

# பாதுகாப்பு அரணுக்கு வெளியே பாம்புக் கடிக்கு மருந்து இல்லை!

அராலி, ஒக். 13

இராணுவ பாதுகாப்பு அரணுக்கு வெளியிலுள்ள வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்கு, வலிகாமம் தெற்கு பிரதேசங்களில் எந்த வைத்திய சாலையிலும் பாம்புக்கடிக்கான மருந்து கிடையாது என்று தெரிவிக்கப்படுகிறது.

வரும் மழைகாலத்தில் பலர் பாம்புக்கடிக்கு உள்ளாகலாம் என அஞ்சப்படுவதால் தீண்டப்படுவோரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் செல்ல முடியாத நிலை இருக்கிறது.

இதனை கருத்திற் கொண்டு பாதுகாப்பு அரணுக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு வைத்தியசாலையில் பாம்புக்கடிக்கான மருந்து கையிருப்பில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு வலி-மேற்கு பிரதேச மீளக்குடியமர்வு புனர்வாழ்வு ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் ஆலோசனைக்குழு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் யாழ் பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக வலி. மேற்கு பதில் உதவி அரசாங்க அதிபர் திரு. சு. புத்திசிகாமணி மேற்படி குழுக்கூட்டத்தில் உறுதியளித்தார்.

மேலும் இப் பிரதேச அரசாங்க வைத்திய சாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் —

இந் நிலமையைப் பயன்படுத்தி தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் கூடுதல் விலைக்கு மருந்து வகைகளை விற்பனை செய்து வருகின்றன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை சங்கானை வைத்தியசாலைகளிலும் அரச ''டிஸ்பென்சரி''

(7 ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளையர் தலைவர் வவுனியாவில் கைது!

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராம்

வவுனியாவில் கடந்த ஒன்பது மாதங்களாக இடம் பெற்று வந்த கொள்ளைகள், வன்முறைகளுக்குப் பொறுப்பான குழுவிதலைன்வர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் வவுனியா பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஒருவரைவிசாரித்தபோது பொலீசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார் எனவும் —

2 கிலோ நிறையுள்ள நகைகளும், பல கொள்ளையிடப்பட்டபொருள்களும் கைப்பற்றப் பட்டன எனவும் — தெரிவிக்கப்படுகிறது. இந்த நகைகளின் பெறுமதி சுமார் 25 இலட்சம் என மதிக்கப்படுகிறது.

இவற்றை விட கொள்ளையிடப்பட்ட நகைகளில் சுமார் இரண்டரைக் கிலோ நிறையுள்ள நகைகள் பல்வேறு வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளன எனவும் —

வங்கியால் வழங்கப்பட்ட அடகுப் பற்றுச் சீட்டுக்களை பொலீசார் கைப்பற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தக் கோஷ்டியால் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள், டெக்குகள், மின் பிறப்பாக்கிகள், மோட்டார் சைக்கிள்கள், மின்சார உபகரணங்கள் ஆகியனவும் அடங்கும்.

இந்தக் கொள்ளைக் கோஷ்டியின் தலைவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் —

தடைசெய்யப்பட்ட பொருள்களை வடக்குக்கு அனுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு வவுனியா நெலுக்குளத்தில் சினிமா தியேட்டர் உள்ளது உனவும் இவர் வவுனியாவில் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்தார் எனவும் பொலீசார்தெரிவித்துள்ளனர்

வலிமேற்கு கரையோர பகுதியில்

# மண் அள்ளுவதை தடுக்க செயலகம் நடவடிக்கை

வலி தென். மேற்கு. ஒக். 13

வலி. மேற்கில் உள்ள கரையோர பகுதிகளில் மண் அள்ளுவதை உடனடியாகத் தடுப்பதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக நவாலி கரையோரப் பகுதியில் சமீப காலமாக மண் அள்ளும் நடவடிக்கைகள் அதிகமாக இடம் பெற்று வருகின்றன.

இதனை உடனடியாக தடுக்கும்படி யாழ். செயலகத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே செயலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-145)

# மருத்துவ மாணவரின் செயல்முறைப் பயிற்சி

## மந்திகையில் நடைபெறுகிறது

வடமராட்சி, ஒக். 13

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கான வைத்திய செயல் முறைப் பயிற்சி வகுப்புகள் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் ஆரம்பமாகியுள்ளன.

மருத்துவ பீட மூன்றாம் ஆண்டைச் சேர்ந்த சுமார் 40 மாணவர்கள் இந்த வைத்தியசாலையில் மகப்பேறு வைத்தியம், குழந்தை வைத்தியம் ஆகியதுறைகளில் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்,

பயிற்சி பெறும் வைத்திய பீட மாணவர்கள் தமக்கு நேர காலம் ஏற்படும் போது பொது வைத்தியம், சத்திர சிகிச்சை வைத்தியம் ஆகிய துறைகளிலும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப் பட்ட காலம் தொட்டு வைத்திய பீட மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே செயல் முறைப் பயிற்சிகளைப் பெற்று வந்தனர்.

இம்முறை அங்கு துறை சார்ந்த வைத்திய நிபுணர்கள் இன்மையால் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவ பீடம் மருத்துவ மாணவர்களுக்கு அறிவித்திருந்தது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மகப்பேறு வைத்திய நிபுணர் ஒருவரும் குழந்தை வைத்திய நிபுணர், ஒருவரும் சேவையில் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-173)

# தமிழர் அரசியலில் தீர்க்கதரிசனம் மிகுந்த தலைவராக விளங்கியவர் வன்னியசிங்கம்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படுவதற்கு வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாகம் உருவாக வேண்டுமெனில்—

முஸ்லிம்களுக்கெனத் தனியான நிர்வாக அலகு ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும்— என்ற நிலைப்பாடு முஸ்லிம் கட்சிகளால் இப்போது முன்னெடுக்கப்படுகிறது.

ஆனால் முஸ்லிம்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழர்கள் அதற்குச் சம்மதம் என்று எடுத்துக் கூறிய தீர்க்கதரிசனம் மிக்கவர் கோப்பாய் கோமான் கு: வன்னியசிங்கம் அவர்கள்.

யாழ். நகரின் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் வசித்த முஸ்லிம் வட்டாரத்தில் புதிய அரசியல் கட்சியான தமிழரசுக் கட்சியின் கொள்கை விளக்கக் கூட்டத்தில் கோப்பாய் கோமான் திரு. வன்னியசிங்கம் பின்வருமாறு தெரிவித்தார்.

''இந்திய துணைக்கண்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளுக்கு நயமாக, காலந்தாழ்த்தாது காங்கிரஸ் விட்டுக் கொடுத்திருந்தால், முஸ்லிம்களுக்கு தனிநாடாக பாகிஸ்தான் உருவாக்கப்பட வேண்டும் என ஜின்னா வலியுறுத்த வேண்டிய நிலை தோன்றியிருக்காது. ஒரு (சமஷ்டிக்) கூட்டாட்சிக்கு தமிழ் மக்களின் கோரிக்கைக்கு நயமாக விட்டுக் கொடுப்பது மேன்மையானது என்பதை பெரும்பான்மையினத்தின் தலைவர்கள் உணர்ந்திருப்பர் என எதிர்பார்க்கிறேன் அந்தக் கோரிக்கை கவனிக்கப்படாவிடின் இலங்கைத் தீவில் மற்றுமொரு பாகிஸ்தானை அவர்களே உருவாக்குவார்கள்'' என்று அவர் சொன்னார்.

தமிழரசுக் கட்சியின் இலட்சியக் குறிக்கோளான (சமஷ்டிக்) கூட்டாட்சியின் ஓர் அலகான தமிழரசாக இருக்கையில் அதனது குறைந்தபட்சக் கோரிக்கையாக பிராந்திய சபைகளுக்காக 1957 இலும் அதன் பின்னர் மாவட்ட சபைகளுக்காக 1965இலும் சிங்களத் தலைமைகளுடன் காணப்பட்ட உடன்பாடுகளையும் அவர்கள் ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொண்டனர்.

> இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் தீர்க்கதரிசனம் நிறைந்த அரசியல்வாதியாகவும் பிரபல சட்டத்தரணியாகவும் விளங்கிய முன்னாள் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினரான கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தின் 85 ஆவது பிறந்ததினம் இன்று ஆகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

### வன்னியரின் பங்கு

தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ''பண்டா — செல்வா'' உடன்படிக்கையை உருவாக்குவதற்கு அமரர் வன்னியசிங்கம் அயராது உழைத்தார். தமிழ் பேசும் மக்களின் மரபு வழித் தாயகத்திற்கு ஆவண ரீதியில் முதல் தடவையாக ஒரு பிரதம மந்திரியின் ஒப்புதலையும், அங்கீகாரத்தையும் பண்டா — செல்வா ஒப்பந்தம் பெற்றுத்தந்தது

1956 இல் அப்போதைய இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயகாவுக்கும், தந்தை செல்வாவுக்குமிடையே ஏற்பட்ட பண்டா — செல்வா உடன்படிக்கை, 1965 இல் அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கும் தந்தை செல்வாவுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கை ஆகியன தமிழ் மக்களின் பிரச்சினைகளை பொதுவாகவும் அவர்களது மரபு வழித் தாயகத்தை குறிப்பாகவும் அப்போதைக்கேனும் ஏற்றுக் கொண்டுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகிறது.

த. இன்பரசு

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அமைக்கப்பட்ட அரசுகள் என்ன பெயரைக் கொண்டிருந்தாலும் இந்த நாடு ஒன்றில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் அல்லது ஐ. தே. கட்சியால் ஆளப்பட்டு வந்துள்ளது. இந்த இரு கட்சிகளுடனும் தமிழரசுக்கட்சி உடன்பாடுகளை மேற்கொண்டது. இந்த இரு கட்சிகளாலும் உடன்பாடுகள் கௌரவிக்கப்படவில்லை.

ஒரு கால கட்டத்தில் தமிழ் பேசும் மக்களை ஒரு தேசிய இனமாகவும் அவர்கள் வாழும் பிரதேசத்தை மரபு வழித் தாயகமாகவும் ஏற்றுக் கொண்ட இந்த இரு கட்சிகளும், சிங்களத் தலைமைகளும் இப்போது அந்த நிலைப் பாட்டிலிருந்து பின்வாங்குவது, தமிழ் மக்களுக்கு தனி நாடு ஒன்றே அறுதியானது என்ற கோப்பாய் கோமான் வன்னிய சிங்கத்தின் கருத்தை ஊர்ஜிதம் செய்வதாக அமைகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சிங்கள அரசுகள் காட்டிவந்த அசமந்த போக்கே வட்டுக்கோட்டை மாநாட்டில் தனி நாடு தீர்மானத்தைப் பிரகடனப்படுத்த வழிகோலியது. சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் இருந்த போது சிங்களக் குண்டர்களிடம் அடி உதை பட்டு தனது ஆடைகள் கிழிந்த நிலையில் நாடாளுமன்றத்தில் அமரர் வன்னியசிங்கம் ஆற்றிய உரை நாடாளுமன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

### திருமலை மாநாட்டில்

1956 ஓகஸ்டில் திருமலையில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக அமரர் வன்னிய சிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

அம் மாநாட்டில், தமிழரசு (சமஷ்டிக்) கூட்டாட்சியின் ஓர் அலகாகக் கிடைக்கும் போது, அந்தத் தமிழரசுக்கு உட்பட்டதாக முஸ்லிம் மக்கள் தங்களது மதம் மற்றும் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கும் மாநிலச் சுயாட்சி வழங்கப்படும் என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அப்போது தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜனாப் முஸ்தபாவே அதனை முன்மொழிந்திருந்தார்.

கிழக்கிலே முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஒரு தனி அமைப்பாக உருவாகுவதற்கு முன்பே, தமிழினத்தின் அரசியல் தலைமையைக் கையேற்ற அதே ஆண்டில் தமிழரசுக் கட்சி முஸ்லிம் மக்களுக்கு அளித்திருந்த உத்தரவாதம் அதுவாகும். இத் தீர்மானத்தையொட்டி தமிழரசுக் கட்சி பின்னர் வழுவல் போக்கினை எக்காலமும் கைக்கொண்டதில்லை.

முஸ்லிம் மக்களின் சுயாட்சி உரிமை மறுக்கப்படக் கூடாது என்பதில் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் எவ்வளவு அக்கறையாக இருந்தார் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழர் தலைவர் தந்தை செல்வநாயகம் அமரர் வன்னியசிங்கத்தைத் தமது வலது கரம் என்று வர்ணித்து வந்தார்.

தந்தை செல்வாவைப் போலவே அமரர் வன்னிய சிங்கமும் அரசியல் தீர்க்க தரிசனம் உள்ள தலைவராக விளங்கினார்.

1959 ஆம் ஆண்டில் அவர் இறந்த போது வயது 48, அவர் இளமையில் மரணித்திருக்காவிடில் தமிழர்களின் அரசியல் தலைமைகள் வேறு விதமாக அமைந்திருக்கும். அரசியல் நிலையும் வேறாக உருவாகி இருக்கக் கூடும்; யார் அறிவார்!

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தலிபான் குழுவுக்குள் உட்கட்சிப் பூசல்!

ஆப்கானிஸ்தானின்பிரசித்தி பெற்ற "சலான்" நெடுஞ்சாலை யுத்தத்தில் தலிபான் படையினர் பாரிய இழப்புக்களைச் சந்தித்ததைத் தொடர்ந்து அக் குழுவுக்குள் கடும் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன என்றும் — போராளிகளின் மன உறுதி குலைந்துள்ளதாகவும்— இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரபானி, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மசூத் ஆகியோரின் படைகள் ஜெனரல் டொஸ்ரமின் படைகளின் பின்புல ஆதரவோடு தலிபான் படைகள் மீது ஆவேசமாகத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

காபூலுக்குள் விரைவில் யுத்தம் வந்தடையும் எனத் தெரிவிக்கும் செய்தியாளர்கள், தலிபான் படைகள் தடுமாறியுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

அத்தோடு தலிபான் குழுவின் முட்டாள் தனமான சட்டங்களால் கடும் கோபத்துக்குள்ளாகி இருக்கும் மக்கள் தலிபான் குழுவுக்கு எதிராகக் கலகம்செய்யத்தொடங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ. நா. விசாரணைக்கு தெ. ஆபிரிக்காவுக்கு ராதிகா

ஜெனிவா, ஒக். 13

தென் ஆபிரிக்காவில் இடம் பெற்றுவருவதாகக் கூறப்படும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டறிய இலங்கைப் பெண் ஒருவரை ஐ. நா. அமைப்பு தென் ஆபிரிக்காவுக்கு அனுப்பியுள்ளது. ராதிகா குமாரசாமியே அந்தப் பெண் ஆவார்.

ராதிகா குமாரசாமி மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒரு சட்டத்தரணி ஆவார்.

தென் ஆபிரிக்காவில் அவர் அரசியல் தலைவர்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும், பாதிப்புற்ற பெண்களையும், பெண் உரிமைக்காகப் போராடும் கழகங்களின் பிரதி நிதிகளையும் சந்தித்து தனது மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பார் எனவும் —

அடுத்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் இவரின் மதிப்பீட்டு அறிக்கையும், சிபார்சுகளும் சமர்ப்பிக்கப்படும் எனவும் வெரித்தாஸ் வானொலி சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது. (இ-10)


குறுகிய கால

**பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்**

கேக் ஐசிங், மாச்சினி மலர்கள், முக ஒப்பனைகளும் தலை அலங்காரங்களும், பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும், சமையற்கலை(Western and Eastern). தொடர்பு:

**YOGI HOME SCIENCE ACADEMY**

(REGD. No: 16322)


75, அம்மன் றோட்,

(வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)

யாழ்ப்பாணம். (43166)


## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

13 - 10 - 1996



★ செல்வன் கிசோர் ★

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த சிவநேசராசா — தவமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிசோர்

தனது இரண்டாவது பிறந்த நாளை 13-10-1996 இல் கனடா ரொரன்ரோவில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

அவரை அப்பா, அம்மா (கனடா), அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பூட்டி, மாமா, மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், (இலங்கை) சிவலிங்க சித்தப்பா, மாமா, மாமிமார் (கனடா), சித்தப்பா (சுவிஸ்), மாமா (பிரான்ஸ்), மாமாமார் (லண்டன்), கரணவாய் மூத்தவிநாயகர் அருள் பெற்று சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சி விதுவலிங்கம் (பேரன்)

(சி-3271)

# உலக அரங்கில்

மசூதிகளில் தொழுகை நடத்துவதையும் தலிபான் குழு சட்ட பூர்வமான கடமையாக்கி தினமும் 5 முறை தொழுகை செய்யாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அறிவித்துள்ளது.

இந்த அராஜகத்திற்கு எதிரான அமைதிப் புரட்சியாக கடந்த வெள்ளிக்கிழமை காபூல் பிரதான மசூதிக்கு எவரும் தொழுகைக்கு வரவில்லை. வீடுகளிலேயே தொழுகை நடத்தப்பட்டது.

"அல்லாவைத் தொழ எங்களுக்குத் தெரியும். தலிபான் சொல்லித்தரத் தேவை இல்லை" என காபூல் வாசி ஒருவர் ரோய்ட்டர் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

### பரிசுபெற்ற 3 ஆம் நாள் மரணம்

இந்த ஆண்டு பொருளியல் விஞ்ஞானத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்க விஞ்ஞானி வில்லியம் விக்ரறி பரிசு கிடைத்த மூன்றாம் நாள் மாரடைப்பால் மரணமடைந்தார்.

நியூயோர்க் நகரில் இருந்து பொஸ்டன் நகருக்கு நள்ளிரவில் தனியாகத் தன் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. (இ-10)

### தேவாலயம் மீது தாக்குதல்

இந்தோனேஷியாவில் தேவாலயங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது ஐவர் கொல்லப்பட்டனர்.

இந்தோனேஷியாவிலுள்ள சிதுபோன் நகரில் உள்ள 9 தேவாலயங்கள் மீதும், 4 கத்தோலிக்க பாடசாலைகள் மீதும், கன்னியர்மடம் ஒன்றின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கத்தோலிக்கர்களுக்கு எதிரான கிளர்ச்சிக்குழு ஒன்றே இத்தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

### அமெரிக்கா இரட்டை வேடம்

ஈரானை இஸ்லாமிய அடிப்படை வாத நாடு எனக் கண்டிக்கும் அமெரிக்கா மிக மோசமான அடிப்படைவாதிகளான தலிபான் குழுவை தனது பிரான்திய நலன் கருதி ஆதரிக்கிறது இது மோசமான இரட்டை வேடம். இப்படி ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (இ-10)

## தென் ஆபிரிக்க முன்னாள் அமைச்சர் விடுதலை

ஜொகானஸ்பேர்க் ஒக். 13 தென் ஆபிரிக்காவில் கொலை மற்றும் சதித்திட்டம் ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மக்னேஸ் மாலனை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

நிறவேற்றுமை, இன ஒதுக்கீடுஆகியன நிலவிய 1987 இல் 13 பேரைக் கொலை செய்த தாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இவருடன் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரிகள் 9 பேரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் இரகசியமான பாதுகாப்பு நடவடிக்கை ஒன்று இயங்கியது என்பதை நிரூபித ஏற்றுக் கொண்டாலும் இதன் விளைவாக கூலிப்படைகளை உருவாக்கினார் என்பதை நிரூபிக்கவோ,1987 படுகொலைகளை மாலனோடு தொடர்புபடுத்தவோ வாதிதரப்பினர் தவறி விட்டனர் என்று தெரிவித்தார்.


## எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு!

எங்களிடம்:

- ★ மென்பான தயாரிப்பு பொருள்கள்
- ★ ஐஸ்கிறீம் தயாரிப்பு பொருள்கள்
- ★ எசன்ஸ் வகைகள்
- ★ மாஜரீன் வகைகள்
- ★ இந்திய ஊதுபத்தி வகைகள்
- ★ நெய் வகைகள்
- ★ டை வகைகள்
- ★ றோயல் பேக்கிங் பவுடர்
- ★ றோயல் கஸ்டட் பவுடர்
- ★ றோயல் அறோறூட் (மா)
- ★ றோயல் குளுக்கோஸ்
- ★ றோயல் நீலம்
- ★ றோயல் கொக்கோ பவுடர்
- ★ றோயல் ஜெலட்டின்
- ★ நீது நிபா ஜெஸ்மின் ரல்க்
- ★ ரல்கம் பவுடர் (சொறி)
- ★ உலர்த்திய தேங்காய் துருவல் D/C
- ★ ஜெலடின் லூஸ்
- ★ பபுள்கம்
- ★ கோன் புளவர் (CORN FLOVR)
- ★ பிஸ்கட் அமோனியா
- ★ ஐசிங் சுகர்
- ★ கோழிச்சாயம்
- ★ வெற்றுப் போத்தல் 1 அவுன்ஸ்
- ★ லிக்குவிட் (LIQUID) குளுக்கோஸ்

மற்றும் பல.

# சிவா நறுமண பூங்கா

இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(43133)


## மீளாத் துயரின் 31-ஆம் நாள்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 21 | 13 |
| 07 | 09 |
| 1927 | 1996 |

திருமதி

**சபாபதிப்பிள்ளை வள்ளியம்மை**

(காலஞ்சென்ற முன்னாள் சாவகச்சேரி பிரபல வர்த்தகர் நா. சபாபதிப்பிள்ளையின் அன்புத்துணைவியார்)

திதி: பூர்வபக்கபிரதமை (13-10-1996)

எமது அன்பிற்கினிய அம்மா! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து இன்றுடன் முப்பத்தொரு நாள்களாகின்றன. எங்களைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து இந்த நிலைக்கு உயர்த்திய எமது அன்புத் தெய்வமே! உமது அன்பு முகத்தை என்றென்றும் மறக்கமாட்டோம். ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

உமது பேரன்புக்குரிய பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.

தனங்கிளப்பு, சாவகச்சேரி. (43117)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு கல்வி நிர்வாக அமைப்பில் ஜனவரியிலிருந்து புதிய மாற்றம்

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 7 மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

புதிய திட்டத்தின்படி யாழ். மாவட்டத்தில் உள்ள 481 பாடசாலைகள் நான்கு கல்வி வலயங்களின் கீழ் (யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி) கொண்டுவரப்படவுள்ளன.

இந்தக் கல்வி வலயங்கள் யாழ். — 1, யாழ். — 2, யாழ். — 3, யாழ். — 4 என அழைக்கப்படும்.

## யாழ் - 1 கல்வி வலயம்

நெடுந்தீவு, தீவு வடக்கு, தீவு தெற்கு, யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கல்விப் பிரிவுகளைக் கொண்டிருக்கும் 141 பாடசாலைகள் யாழ். — 1 கல்வி வலயத்தின் கீழ் இருக்கும். 53,138 மாணவர்கள், 1986 ஆசிரியர்கள் இப்பிரிவில் இருப்பர்.

## யாழ். 2 கல்வி வலயம்

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு வலிகாமம் கிழக்கு. வலிகாமம் தெற்கு ஆகிய 5 கல்விப் பிரிவுகள் இதன்கீழ் இருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 189. ஆசிரியர் எண்ணிக்கை 2,409. மாணவர்கள் எண்ணிக்கை 71,050.

## யாழ் - 3 கல்வி வலயம்

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தென்மேற்கு ஆகிய மூன்று பிரிவுகள் இதன் கீழ் இருக்கும். பாடசாலைகளின் எண்ணிக்கை 84. ஆசிரியர் எண்ணிக்கை 1157. மாணவர்கள் எண்ணிக்கை 34,769.

## யாழ் - 4 கல்வி வலயம்

தென்மராட்சி பிரிவைக் கொண்டிருக்கும். பாடசாலைகளின் எண்ணிக்கை 67. ஆசிரியர்களின் எண்ணிக்கை 880. மாணவர்கள் எண்ணிக்கை 25,393.

## வவுனியா மாவட்டத்தில்

வவுனியா மாவட்டம் மூன்று கல்வி வலயங்களாகப் பிரிக்கப்படும். அவை: வவுனியா தெற்கு தமிழ் (ஏ), வவுனியா தெற்கு சிங்களம், வெங்கலச் செட்டிக்குளம், வவுனியா வடக்கு. வவுனியா தெற்கு தமிழ் (பி).

இம் மாவட்டத்தில் 74 தமிழ்ப் பாடசாலைகள், 22 சிங்களப் பாடசாலைகள், 10 முஸ்லிம் பாடசாலைகள் உள்ளன. 799 தமிழ் ஆசிரியர்கள், 252 சிங்கள ஆசிரியர்கள், 90 முஸ்லிம்கள் பணிபுரிகின்றனர். மாணவர் எண்ணிக்கை வருமாறு: தமிழ் - 24,987, சிங்களவர் - 2996, முஸ்லிம் - 1231.

வவுனியாவில் உள்ள மேலதிக மாகாணப் பணிப்பாளர் மன்னாரையும் இப்போதைக்கு கவனித்து வருவார்.

## மன்னார் மாவட்டத்தில்

மன்னார் கல்வி வலயத்தில் 5 பிரிவுகள் இருக்கும். அவையாவன: மன்னார், முசலி, நானாட்டான், மடு, மாந்தை மேற்கு ஆகியவையே இவை ஆகும்.

83 தமிழ், 23 முஸ்லிம் பாடசாலைகள் உள்ளன. 695 தமிழ், 17 முஸ்லிம் ஆசிரியர்கள் அங்கு பணிபுரிகின்றனர். தமிழ் மாணவர் - 19,175 முஸ்லிம் மாணவர் 220. மூன்று சிங்களப் பாடசாலைகள் இயங்குவதில்லை.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 4 பிரிவுகள் உள்ளன.

அவையாவன- கண்டாவளை, கரைச்சி, பளை, பூநகரி.

87 தமிழ்ப் பாடசாலைகள் அங்கு உள்ளன. மாணவர்கள் எண்ணிக்கை 40 281. ஆசிரியர்கள் எண்ணிக்கை 759. இங்கு இருந்த ஒரேயொரு முஸ்லிம் பாடசாலையும் சிங்களப் பாடசாலையும் தற்போது இயங்குவதில்லை.

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

முல்லைத்தீவு மாவட்டம் இரண்டு கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு — 1, முல்லைத்தீவு — 2 என இவை அழைக்கப்படும்.

மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று என 5 பிரிவுகளை இவை உள்ளடக்கும். 99 பாடசாலைகள் உள்ளன. ஆசிரியர் எண்ணிக்கை 695, மாணவர் எண்ணிக்கை 28,123.

கிளிநொச்சியும் முல்லைத்தீவும் ஒரு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும்.

(இ-3)

# அனுமதிப்பத்திரம் இன்றி நிறுத்தலளவை

யாழ்ப்பாணம் ஒக். 13

அரசாங்க அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் நிறுத்தல் அளவை உபகரணங்களை விற்பனை செய்வதும், திருத்துவதும் தண்டனைக்குரிய குற்றங்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட நிறுவை அளவை பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(இ-4)

# வடமராட்சியில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வடமராட்சி, அக். 13

வடமராட்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களை பிடித்து ஒழிக்கும் பணியில் உள்ளூராட்சி மன்றங்கள் ஈடுபட்டுள்ளன.

பருத்தித்துறை நகரசபை, வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை, பருத்தித்துறை பிரதேச சபை ஆகியன இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

இது வரையில் பருத்தித்துறை, நெல்லியடி, மந்திகை ஆகிய முக்கிய இடங்களில் பெருந்தொகையாக கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

(இ-173)

# அன்னை வடிவாய்நின்று அருள்புரியும் சக்திக்கு விசேடமான நவராத்திரிவிழா

நாம் வாழும் பூமி ஒரே சீரான வேகத்தில் தன்னைத் தானே சுற்றிச் சூரியனையும் சுற்றி வருகிறது. இந்த வேகத்தில் ஒரு நொடிப் பொழுதும் மாறுவதில்லை. நவக்கிரகங்களும் இவ்வாறு தான். இதே போன்று இம் மண்டலத்தில் பல இயக்கங்களைக் காண முடிகிறது. இவைகளை எல்லாம் எமது கண்களுக்குப் புலனாகாத — ஆய்வுகளுக்கு அப்பாற்பட்ட — ஒரு சக்தி இயக்குகிறது.

இதனை ஆராய்ந்து உணர்ந்த எமது முன்னோர்கள் அச்சக்தியைத் தெய்வமாகக் கருதி வழிபடத் தொடங்கினர். கண்களுக்குப் புலனாகாத அச் சக்தியைப் பெண்வடிவம் உடையதாக— தாயாக உருவகித்தனர். இதற்கும் சில காரணங்கள் உள்ளன.

ஒரு குழந்தை பிறந்தவுடன் தனது தாயைத்தான் முதன் முதலாகக் காண்கிறது. தாயைத்தான் 'அம்மா' என முதலில் அழைக்கிறது. தாயிடம் தான் பால்பருகித் தனது பசியைத் தீர்க்கிறது. வளர்ந்த பின்பும் பெரியவனாகும்வரை தாயிடம் தான் தனது தேவைகளைப் பூர்த்தி



செய்யச் செல்கிறது.

ஆணையும் பெண்ணையும் ஒப்பிட்டு நோக்கும் போது தான் நினைத்ததைச் சரியானாலும் பிழையானாலும் உடனுக்குடன் சாதிக்கும் திறன் கொண்டவளாகப் பெண் இருப்பது புலனாகின்றது. அதாவது ஒரு கருமத்தை எடுத்துக் கொண்டதும் பெண் அதனை உடனே செய்து முடித்து விடுகிறாள் பின் விளைவுகள் பற்றிச் சிந்திப்பது குறைவு.

ஆனால் ஆண் அப்படியல்ல. பலமாகச் சிந்தித்து ஆராய்ந்தே செயற்படுகின்றான். சிலவேளைகளில் முடிவு எப்படியிருக்குமோ என்ற அச்சத்தினால் கைவிட்டு விடுவதும் உண்டு. இதனால் இயங்கிச் செயற்படும் வல்லமையுள்ளவள் பெண்



ணாகவே இருக்கிறாள்.

## பெண்ணின் பொறுமை

ஆண்கள் தினமும் பல விதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் உடற் களைப்புக் காரணமாக ஒரு பிள்ளையின் கோரிக்கைக்கு நிதானமாகச் செவிமடுக்க முடிவதில்லை. இதனால் அப்பிள்ளையின் தேவை பூர்த்தியடையக் காலதாமதமாகிறது; அல்லது பூர்த்திசெய்யப்படாமலே போகிறது. ஆனால் பெண் பொறுமையாக இருந்து பிள்ளையின் தேவையை அறிந்து விரைவில் அதனைப் பூர்த்தி செய்கிறாள்.

இது போன்ற காரணிகளினால் தந்தையிலும் தாய் முன்னுரிமை பெற்று மதிக்கப் படுகிறாள். தெய்வத்தின் முன்னிலையில் மனிதர்கள் அதன் குழந்தைகளே!

ஆகவே வழிபாட்டின் மூலம் தாம் விடுக்கும் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றும் சக்தியைப் பெண்ணுருவாக — தாயாக— உருவகித்தனர்.

## சக்தி வழிபாடு

எமது முன்னோர் ஒன்பது தினங்களை சக்தி வழிபாட்டிற்கு ஒதுக்கியுள்ளனர். புரட்டாதி மாதத்தில் பூர்வபக்கப் பிரதமை முதல் நவமி ஈறாகவுள்ள இத்தினங்கள் நவராத்திரி என வழங்கப்படுகின்றன.

முதல் மூன்று தினங்களும் வீரத்தை வழங்கும் துர்க்கையாகவும் அடுத்த மூன்று தினங்கள் பொருள் வழங்கும் இலட்சுமியாகவும் நிறைவாக மூன்று தினங்கள் கல்வியைப் புகட்டும் சரஸ்வதியாகவும் சக்தி உருவகிக்கப்படுகின்றாள். அடுத்த தினம் வெற்றியை அளிக்கும் தினமாக விஜயதசமி எனப்படுகிறது.

சக்தியைத் துதித்து இத்தினத்தில் எக்கருமத்தை ஆரம்பித்தாலும் அது சித்தியாகும் என்பது மக்களின் நம்பிக்கை.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் சக்தி வழிபாடே தொன்மையானது என ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. நாகபூஷணி அம்மன் என்ற பெயரில் சக்தி உருவகிக்கப்பட்டு வந்துள்ளாள். இதனால்தான் இங்கு வாழ்ந்த ஆதிக்குடியினர் நாகர்கள் என அழைக்கப்பட்டனர். படையும் கண்டால் நடுங்கும் பாம்பையே அடக்கியாளும் வல்லமை கொண்டவளாக இச்சக்தி கருதப்பட்டாள் என்பதே இதன் பொருள்.

அன்னை வடிவாய் நின்று அருள்புரியும் சக்தியை வழிபட விசேட இரவுகளாக விளங்குவது நவராத்திரி விழா.



இவ்வருட நவராத்திரிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி அடுத்த ஞாயிறன்று பூர்த்தியாகின்றது. அடுத்த நாள் திங்கட்கிழமை விஜயதசமியாகும்.

அகிலாண்ட நாயகியாக விளங்கும் அன்னையை இந் நாள்களில் விரதமிருந்து பிரார்த்தித்து துதித்து அவள் அருள் [illegible] பிள்ளை

# வினைகளை வேரறுக்கும் ஜகத்குரு விஸ்வப் பிரம்மா

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் இன்று ''விஸ்வகர்ம'' நாள் கொண்டாடப்படுகிறது அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

விஸ்வம் என்றால் உலகம் என்றும் பிரம்மா என்றால் படைப்பவர் என்றும் பொருள்படும். விஸ்வப் பிரம்மாவானவர் உலகம் முதலிய அனைத்துப் படைப்புக்கும் மூலகாரணர் என்று வேதங்கள் மொழிகின்றன. இவரை விஸ்வகர்மா எனவும் வழங்குவர்.

பார் எங்கும் பரவி வாழும் பாரம்பரியப் பெருமை மிக்க சமூகம் விஸ்வகர்ம சமூகமாகும். இதனைப் படைத்தவர் விஸ்வப் பிரம்மா இஃது வேத காலத்துக்கும் முந்திய மிகத் தொன்மை வாய்ந்தது என்று புராண இதிகாசங்கள் இதன் பெருமையை எடுத்தியம்புகின்றன.

சர்வ லோக சிருஷ்டி கர்த்தாவும் தேவர் மூவர்களுக்கும் தேவாதி தேவனாக, ஆதாரக் கடவுளாகத் திகழும் ஸ்ரீ விராட் விஸ்வ கர்மபரப் பிரம்மாவானவர் தமது சக்தியால் பஞ்சமுக விஸ்வப் பிரம்மாவாக புரட்டாதித் திங்களில் சித்திரை நட்சத்திரத்திலே தோன்றினார் என்று யஜுர் வேதம் கூறுகின்றது.

ஜகத் குருவான ஸ்ரீ விஸ்வப் பிரம்மா பரப்பிரம்மத்தின் சத்யோஜாத எனும் கிழக்கு நோக்கிய முகத்தில் அறிவு விளக்கம் மிகுந்த ருத்திர ரூபமுடைய ஸாநகரிஷி என்ற மநுவும், வாம தேவம் எனும் தெற்கு நோக்கிய முகத்தில் விஷ்ணு ரூபமுடைய ஸ்நாதன ரிஷி என்ற மயவும், அகோரம் எனும் மேற்கு நோக்கிய முகத்தில் பிரம்ம ரூபமுடைய அபுவநரிஷி என்றதுவஷ்டாவும், தற்புருஷம் எனும் வடக்கு நோக்கிய முகத்தில் இந்திர ரூபமுடைய பிரத்நஸரிஷி என்ற சிற்பியும், ஈசானம் எனும் ஆகாயத்தை நோக்கிய முகத்தில் சூரிய ரூபமுடைய சபர்ணஸ ரிஷி என்ற விஸ்வக்ஞவும் தெய்வாம்சமாகத் தோன்றினார்கள்.

ஸ்ரீ விஸ்வப் பிரம்மாவின் ஐந்து முகங்களே உலகுக்கு ஐந்து மகா மந்திரங்களாகத் தரப்பட்டுள்ளன. ஐந்து முகங்களும் சடா மகுடங்களும் பதினைந்து கண்களுமுடைய சத்யோஜாத முகம் வெண்ணிறமானது. வாமதேவம் எனும் முகம் கருநீல நிறமுடையது. அகோரமுகம் சிவப்பும், தற்புருஷ முகம் மஞ்சளும், ஈசான முகம் பச்சையும் சரீரம் பொன்னிறமும் உடையது. விஸ்வப்பிரம்மாவானவர் பத்துப் புஜங்களையுடையவராய் பிரகாசிக்கும் குண்டலங்களை அணிந்து பொற் பீதாம்பரத்தை உத்தரீயமாகத் தரித்து அருட்காட்சியளிப்பர்.

இவர் உருத்திராட்ச மாலையணிந்து, புலித்தோலாடை தரித்து ஒரு கரத்தில் அக்ஷ மாலையும் ஒரு கரத்தில் தாமரை மலரும் ஒரு கரத்தில் நாகபாசமும் ஒருகரத்தில் சூலமும் ஒரு கரத்தில் சங்கும் மற்றொரு கரத்தில் சக்கரமும் ஒரு கரத்தில் பினாகம் என்ற வில்லும் ஒரு கரத்தில் பாணமும் ஒரு கரத்தில் மேரு என்ற வீணையும் ஒரு கரத்தில் நாகமும் கொண்டு விளங்குகின்றார்.

உலகம் இயங்குவதற்கு ஐந்தொழிலும் அவசியம். அது போலவே நாங்கள் இந்தப் பூமியில் சகல ஐசுவரியங்களையும் பெற்று வாழ்வதற்கு ஸ்ரீ விஸ்வப்பிரம்மாவை வழிபடல் வேண்டும்.

ஸ்ரீ விஸ்வப்பிரம்மா தோன்றிய புரட்டாதித் திங்கள் சித்திரை நட்சத்திர நாள்தான் ஆயுத பூஜை செய்யும் நாளாகும். அத்தினத்தையே விஸ்வகர்ம தினமாக அனுஷ்டிக்கின்றார்கள். ஆகவே விஸ்வப் பிரம்மாவை வழிபட்டு உலகில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சிறப்புற்று வாழ்வோமாக.

— க.வி.இ. இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தம்பிப்பிள்ளை மூர்த்தி ஆகிய எனது 582061858 V இலக்க அடையாள அட்டையும், தொழில் அட்டையும் ஆனைப்பந்தி— குருநகருக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 58, பிறவுண் வீதி (நரிக்குண்டு முன்பாக), யாழ்ப்பாணம் அல்லது ஸ்பெசல் என்ஜினியர்ஸ், இல. 8A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43165)

பொன்னம்பலம் மகாதேவனின் 670254330 V இலக்க அடையாள அட்டை திருநெல்வேலி - நல்லூர் - அரியாலைக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ப. கணேஸ், பகவான் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43160)

### (O/L) MATHS

அண்ட சராசர முறையில் ஆரம்ப அறிவு 20 நிமிடங்களில் நிறைவேற்றப்படும். தொடர்ந்து அம்முறையில் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (43058)

### O/L கணிதம்

1110 வினாக்கள் மூலம் விரைவாக Distinction Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். B.Sc ஆசிரியர், 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (43162)

### மணமகள் தேவை

பல நிறுவனங்களின் சொந்தக்காரர், கத்தோலிக்கமதம், 47 வயது, இளமைத் தோற்றம், தீயபழக்கங்கள் எதுவுமற்ற தாரம் இழந்த, இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு வாழ்க்கைத் துணைவி தேவை. தாரம் இழந்தவர்களும், விவாகரத்துப் பெற்ற எந்தமதத்தினரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: மே/பா இல. 542, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43157)

லண்டன் பிரஜா உரிமை பெற்ற 37 வயதுடைய பொறியியலாளர், நட்சத்திரம் ரேவதி. இவருக்கு படித்த மணமகளை தேடுகிறார்கள் பெற்றோர்கள். தொடர்பு: மே/பா இல. 544, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43164)

கனடாவில் தொழில் புரியும் நட்சத்திரம் திருவோணம் 3 ஆம் கால், 39 வயதுடைய யாழ். இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு படித்த அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். தொடர்பு: R. செல்வநாயகம், சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (8912)

### ஓர்கன் வகுப்புகள்

ஓர்கன் (Organ), கிற்றார் (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் எல்லா நாள்களிலும், பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறுகின்றன. முகவரி: இல. 238, கோவில் வீதி, நல்லூர். (ஆலயத்திலிருந்து 300 யார்) (42941)

### புத்தகம்

கேதார கௌரி விரத மகிமையை விளக்கும் நூல் விற்பனையாகின்றது. தபாலில் பெற விரும்புவோர் ரூபா 12/- அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். நாயகபாலன் புத்தக களஞ்சியம், மானிப்பாய். (43105)

### நீமியா

மழைகாலம் வந்துவிட்டது. நீமியா இயற்கைப் பசளை பாவித்து அமோக விளைச்சலைப் பெறவும். இது பூச்சிகளின் தாக்கத்தைக் குறைக்கும். சகல கமநல சேவை நிலையங்களிலும், அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். (சி- 3273)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த படித்த அழகிய 32 வயதுடைய பெண் ஆசிரியைக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றார்கள். நட்சத்திரம் அச்சுவினி. தொடர்பு: மே/பா இல.543, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43163)

### திருமண சேவை

துர்க்கா திருமண சேவை - மாயக்கப் பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டியிலும், யாழ்ப்பாணம், நாவலர் வீதி- பிறவுண் றோட் சந்தியிலும் இயங்குகின்றது. திங்கள் சந்திக்கலாம். படத்துடனும், குறிப்புடனும் வரவும். (43110)

**O/L MATHS**

விசேட மீட்டல் வகுப்புகள்

ஆசிரியர்:

திரு. T. அற்புதராஜா

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**16-10-96** (புதன்)

பிரிவு I 7. 30 மணி

பிரிவு II 2. 45 மணி

மாணவர் நலன் கருதி நேரம் மாற்றப்படும்

192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

(43161)

வெளிவந்து விட்டது!

துரித மீட்டலுக்கு,

க. பொ. த. (சா. த) வகுப்புகளுக்குரிய

★ **வர்த்தகமும் கணக்கியலும்** ★

## வினா - விடை

★ கடந்த 8வருட பொதுப்பரீட்சைவினாக்களையும்,
★ எதிர்பார்க்கை வினாக்களையும், விடைகளையும் உள்ளடக்கியது.

விலை: ரூ. 55/-

ஆக்கியோன்:
தம்பித்துரை பாலகிருஷ்ணன்
(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம் (43168)

## 31- ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 01 — 05 — 1975

உதிர்வு: 13 — 09 — 1996

### செல்வன் பசுபதி பிரபாகரன்

(பிரபா)

திதி: 13 — 10 — 1996

பிரபா,
எங்கள் அன்புக்குரியவனே!
நீ எம்மோடு வாழ்ந்த நாள்களின்
நினைவுகளில் விழிகள் நிறைகிறது
காலம் உன் உயிரான
உறவுகளிடமிருந்து உன்னைப் பிரித்தது
ஆனால்- என்றும் எம் நினைவுகளிலும்
கனவுகளிலும் நீ வாழ்கிறாய்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
அக்காமார், தங்கை,
உறவினர்கள், நண்பர்கள்.


முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (43134)

கட்டப்பிராய் முத்துமாரி அம்பாள் ஆலய அறங்காவலர்

### திரு. சிவகுரு கணபதிப்பிள்ளை
### திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரிய தம்பதிகள்) ஆகியோரின்

## நினைவஞ்சலி



பரிவாலும் ஒத்த உணர்வாலும் அன்பின்
பகிர்வாலும் செய்த பணியின்
விரிவாலும் பக்தி விளைவாலும் ஒன்றி
விண்ணாடு சேர விரைவீர்!
பெருவாழ்வு கண்ட பெரியீர் நும் வாழ்வில்
பிறகேது பேறு? மறவோம்
ஒருகாலும் உம்மை! உமைபாத நீழல்
உறைவீர் ஓம் சாந்தி ஓம் ஓம்!

★ குறிப்பு:-
(1) அந்தியேஷ்டிக் கிரியைகள் (**14-10-1996**) திங்கட்கிழமை கட்டப்பிராயில் அவரது இல்லத்தில் நடைபெறும்.
(2) காலை 7 மணிக்கு கட்டப்பிராய் அம்மன் ஆலயத்தில் மோட்ச தீபம் ஏற்றப்படும்.
(3) காலை 8 மணிக்கு கல்வியங்காடு இந்து தமிழ் வித்தியாலயத்தில் இருந்து (அமரர்கள் இருவரும் கற்பித்த பாடசாலை) திரு உருவப்படம் ஊர்வலமாக வீட்டிற்கு எடுத்து வரப்படும்.
(4) காலை 9 மணி முதல் 11 மணி வரை ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

மேற்படி நிகழ்வுகளில் உற்றார், நண்பர்கள், அன்பர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

(8908) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 90ஆவது நாள் நினைவஞ்சலி



மலர்வு: 08 — 11 — 1966

உதிர்வு: 15 — 07 — 1996

### அமரர் சுந்தரராசா சிறிதரன்

(சிறி)

பாசமுடன் பெற்றவளுக்குப் பெரியவனானாய்
உடன்பிறந்த மூவரையும் உன் உயிர் போல் காத்தாய்
ஊருக்கெல்லாம் நல்லவனானாய்
நினைத்தவள் மறுத்ததால் உன் நிழலையே அழித்தாய்
நீ சொன்ன விகடங்களைச் சொல்லியே
அழுகிறோம் ஐயா!
ஏழேழு ஜென்மமும் உன் புகழ் நிலைத்திருக்கும்.

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாய், சகோதரிகள், சகோதரன்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (சி/3278)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சகுனம் நல்லதல்ல

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென்று அரசாங்கம் தனது சார்பில் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. இனப்போர் தொடங்கிய கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் அரசாங்கம் ஒன்று தனது சொந்தத் தீர்வை முன்வைத்தது இது தான் முதற் தடவை.

ஆனால் தனது தீர்வு யோசனையை நிறைவேற்றக் கூடிய நாடாளுமன்றப்பலம் அரசுக்கு இல்லை. அதனால் இவ்விடயத்தில் தான் நினைத்ததை தன்னிச்சையாக நடைமுறைப்படுத்தும் சக்தி அரசுக்கு இல்லாமற் போயிற்று. எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாவிடில் அரசின் தீர்வுத் திட்டம் நிறைவேற முடியாது.

தீர்வுத் திட்டம் 1995 ஒகஸ்ட் 3 ஆம் திகதி வெளியிடப்பட்ட போதிலும் கடந்த வியாழக்கிழமை — இம் மாதம் பத்தாம் திகதி — தான் தெரிவுக்குழுவின் பரிசீலனைக்கு முதன் முதலாக வந்திருந்தது.

அந்த ஆரம்பக் கட்டத்திலேயே, அரசின் யோசனைக்கு, அதன் அடிப்படை அம்சத்துக்கு எதிராகக் கருத்துக் கிளர்ந்திருக்கிறது.

''இலங்கை ஐக்கியமும் இறைமையும் கொண்ட குடியரசாகும் என்பதுடன், இலங்கைக் குடியரசு என அறியப்படுதலும் வேண்டும் இலங்கைக் குடியரசு கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருத்தல் வேண்டும்'' — என்பது யோசனையின் முதலாவது சரத்து.

இலங்கை ஒற்றையாட்சி அமைப்புடையது என்ற அம்சம் நகல் வரைபில் இல்லை என்பதனைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் சுட்டிக் காட்டிக் கேள்வி எழுப்பின

அரசின் தீர்வுத் திட்டத்தின் அடிப்படை ஆதாரமான ஒற்றையாட்சியை நீக்கும் சரத்துக்குப் பிரதான எதிர்க்கட்சி ஆதரவளிக்கப் போவதில்லை என்பது இப்போதே உணர்த்தப்பட்டிருக்கிறது அதனை ஆரம்ப சமிக்ஞை என்றும் கொள்ளலாம்!

அரசாங்கத்தின் சார்பில், தீர்வுத்திட்டத்தின் சிற்பியான அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலைச் செய்ய முடியாது என்று தெரிவுக் குழுக் கூட்டத்தில் விளக்கியிருக்கிறார்.

ஆனால் அவரின் விளக்கம் ஐ. தே. கட்சிக்கு செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கும். ஏனெனில் நாட்டைச் சீர்குலைத்து வரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்பதனை அந்தக் கட்சி புரிந்துகொள்வதாக இல்லை; புரிந்து கொண்டாலும் அதனை வெளிக்காட்டப் போவதில்லை.

இலங்கை பல இன மக்கள் வாழும் நாடு. இங்கு ஒற்றையாட்சி முறை மக்களிடையே சமத்துவத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்குப் பெருந் தடையாக இருக்கும். முழு நிறைவான கூட்டாட்சி முறை தான் இலங்கை பிளவுண்டு போகாமல் தடுப்பதற்குச் சிறந்த மார்க்கம்.

இத்தனை பேரழிவுகள், சீரழிவுகளின் பின்னரும் சிங்கள அரசியல் தலைவர்கள், ஒற்றையாட்சி ஒழிப்புக்கு முட்டுக்கட்டை போடுவது நல்ல சகுனமல்ல. மிகவும் கவலைக்குரிய நிலை இது.

## அக அமைதி பெறுவதற்கு சுயதரிசனம் செய்வோம்

தோட்டக்காரன் தன் தோட்டத்துக்கும் அங்கு தான் வளர்க்கும் செடிகளுக்கும் செய்ய வேண்டியதனைத்தையும் இஸ்ராயேலாகிய திராட்சைக் கொடிக்கும் இறைவன் செய்தார். எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து விடுவித்து கானான் நாட்டை முழு சுதந்திர வாழ்வுக்குக் கொணர்ந்தார்.

இறைவாக்கினர் இசையாஸின் அறை கூவலுக்கு அமைய தாய் தன் மகவைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்து இஸ்ராயேல் இனத்துக்கு செய்தது போல, எமது தமிழ் இனத்தையும் இறைவன் தனிப்பட்ட முறையில் அன்பு செய்து, அவரே நிலத்தைப் பண்படுத்தினார்; நீர் வார்த்தார்; உரமிட்டார்; களையெடுத்தார்; கனி கொடாத கிளைகளைத் தறித்து விட்டு, கனி தரும் கிளைகள் மிகுந்து கனி தருமாறு செய்தார் (அரு 15:1-2: சங் 79:8-9) மேலும், பாதுகாப்புக்குக் கோபுரம் என்ன? மதிற் சுவரென்ன? செய்யாதது ஒன்றுமில்லையென்னும் அளவுக்கு ஆண்டவர் எல்லாம் செய்தார்.

நாம் ஒவ்வொருவரும் நடந்து வந்த பாதையை ஒரு கணம் இன்று திரும்பிப்பார்த்தால் இந்தப் போர்ச்சூழல் பாதையில் கூட இறைவன் எமக்கு இதையே செய்தார் என்பதனை உணர்வோம்

இறைவன் எம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? மக்கள் ஆண்டவர் வழியில், அன்புப் பணியில் நீதியுடனும், நேர்மையுடனும், நடக்க வேண்டும் என்பதே. இதுவே அவர் விருப்பம். ஆனால் காட்டுத் திராட்சைகளாகவே மாறி இன்னும் அதே அன்பற்ற வாழ்வு, அநீத வாழ்வு, அசுத்த வாழ்வு, அக்கிரம வாழ்வு, அடிமை வாழ்வு, நம்மை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை நாமறிவோம். இறைவன் விரும்புவது அறம்; நாம் விளைவிப்பதோ மறம்-இறைவன் தேடுவது நீதி, நேர்மை, ஒழுக்கம்; நாம்கொடுப்பதோ அநீதி, அக்கிரமம், ஒழுக்கக் கேடு. இறைவன் எதிர்பார்ப்பது விடுதலை; நாம் வாழ்வதோ அடிமைத்தனை.

இதிலிருந்து நாம் விடுதலை பெற விரும்பினால் சுயதரிசனம் கொண்டவர்களாக. எமது சுய குற்றம் குறைகளிலிருந்து எம்மையே நாம் விடுவித்து எம்மைச் சுற்றிச் சூழ்ந்து, அமைதியற்ற அல்லல்கள் நிறைந்த சூழ்நிலை காணப்படினும், அவ்வாறான நிலை நீடித்தாலும் கூட நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அக அமைதிக்கும் — அகச்சாந்திக்கும் — அடித்தளமிட்டு நற்கனி கொடுக்கும் நற்திராட்சைகளாக மாறி எம் நல்வாழ்வு பிறருடைய வாழ்விலும் ஒருதாக்கத்தை, மாற்றத்தை ஏற்படுத்த முயல வேண்டும்.

இன்னும் நாம் எமது வாழ்விலே காண்பது, அனுபவிப்பது கவலை என்ற ஒருபெரும் தொற்று நோய்.

அது மனித வாழ்வைச் சிதைத்துச் சீர்குலைய வைக்கின்றது (பிலிப் 4 : 6 - 9)

இவ்வாசகங்களின் வழியாக கவலை நீக்கும் மருந்தை எமக்குத் தருகின்றார், புனித சின்னப்பர். எமது வாழ்வின் சகல தேவைகளில், கவலைகளில், எதிர்பார்ப்புக்களில் இறைவனை நம்பிக்கைப்படுத்தி ஓர் உயர்ந்த உறவு, உணர்வு நிலையில் எமது தேவைகளை அவர் திருமுன் பிரசன்னப் படுத்தி அக அமைதியில் வாழ அன்போடு பணிக்கிறார்; அன்போடு அழைக்கின்றார்.

வீட்டுத்தலைவன் குத்தகைக்காரர்களை நம்பி முழுப் பொறுப்பையும் அவர்களிடம் விட்டுச் சென்றது போல, இறைவன் நம் ஒவ்வொருவரிடமும் நமது மீட்பின் முழுப்பொறுப்பையும் ஒப்படைக்கின்றார். ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனின் திராட்சைத் தோட்டம். அதைப் பேணிக்காத்து பயனுள்ளதாக மாற்றுவது ஒவ்வொருவரின்பொறுப்பு. நமக்கு முழுச் சுதந்திரம் அளித்த இறைவன் நம் ஒவ்வொரு செயலிலும் குறுக்கிட்டு நம்மை ஓர் இயந்திரமாக

### ஞாயிறு நற்பிரசாதம்

மாற்ற விரும்புவதில்லை.

எமது அனுமதியின்றி எம்மை உருவாக்கியவர், எமது அனுமதியின்றி எம்மை மீட்கப்போவதில்லை என்பதை ஆழமாக எம்மனத்தில் கொண்டு அன்பின், மீட்பின், அற நெறியின் பாதையில் நாம் எம்மையே அழைத்துச் செல்ல ஆவல் கொள்வோம்.

நமக்கு அளிக்கப்பட்ட அருங்கொடையாகிய விசுவாசத்தை நாம் வீணாக்கி விட்டால், அது நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு, பலன் அளிக்கக்கூடிய மற்றவர்களுக்கு அளிக்கப்படலாம் இந்நிலை இராது தடுக்க சமாதானத்தின் ஊற்றாகிய கடவுள் நம்மோடிருந்து நம்மை உறுதிப்படுத்தி, உற்சாகமளித்து பலன் தரும் செடிகளாக எம்மை மாற்றுவார்.

— அருட்திரு
பி. யேசுநேசன் அமதி.

## இடமாற்றத்தை ரத்துச் செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.13

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மாகாணசபை பிரதம செயலாளரைக் கேட்டுள்ளது

இவரை வேறு இடத்துக்கு உடனடியாக இடமாற்றம் செய்யும் உத்தரவை மாகாண சபை பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி அனுப்பியிருந்தார். (இ-3)

பாதுகாப்பு.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி

களிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் தினமும் வைத்திய சேவைக்காக செல்வதாகவும் —

வைத்திய அதிகாரிகளுக்கு அங்கு பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் நாட்கணக்கில் காத்திருந்தே சிகிச்சை பெற வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைகளில் வெட்டுக்காயங்களுக்குதையல் போடுவதற்கான உபகரணங்கள் இல்லாமையால் தனியார் ''டிஸ்பென்சரி'' களில் கூடுதல் பணம் அறவிடப்படுவதாகவும் —

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் — கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4-12)

### நாளை

புரட்டாதி 28
திங்கட்கிழமை
திதி: துதியை
முன்னிரவு 7. 50 வரை,
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் 5. 25 வரை.
ராகுகாலம்: 7.32—9.02
சுபநேரம்: 12.02—1.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

தற்காலிகமாக நியமிக்கப்பட்ட

## உதவிகல்விபணிப்பாளர் நியமனம் ரத்தாகும்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட விருப்பதாக மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுடிவகலாலா தெரிவித்துள்ளார்.

மாகாண சபையால் பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சை மூலம் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் எந்தவித அநீதியோ, பாரபட்சமோ இடம்பெறாது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி முதல் அமுலுக்கு வரும் புதிய நிர்வாக அமைப்புக்கு கல்வி அதிகாரிகளை நியமிப்பதில் பாகுபாடு எதுவும் நிலவாமல் இருப்பதை கண்காணிக்க மாகாண கல்விப் பணிப்பாளர் தலைமையில் குழுஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-3)

## க.பொ.த.ப (சாதாரண) பரீட்சை பெறுபேறுகள் எப்போது வரும் ?

சூரியக்கதிர் I, II இராணுவ நடவடிக்கைகளினால் கடந்த வருடம் டிசம்பரில் நடைபெற வேண்டிய க. பொ. த. ப. (சாதாரண தர) பரீட்சை வடபகுதியில் நடைபெறவில்லை என்பதும் அது பின்னர் 1996 ஜூலையில் (விசேட பரீட்சையாக) நடைபெற்றதும் யாவரும் அறிந்ததே.

மேற்படி இராணுவ நடவடிக்கையால் பரீட்சை பிற்போடப்பட்டதால் மாணவர்கள் பல பாதிப்புக்களை எதிர்கொண்டதுடன் அவர்கள் உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கவும் முடியாது போயிற்று. எனினும் பாடசாலைகளிலும் கல்வி சப்பந்தமான ஏனைய நிறுவனங்களிலும் உயர்வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வரும் இவ்வேளையில், இம்மாணவர்களின் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் கிடைக்கவில்லை

இப்பரீட்சை வடபகுதிக்கு மாத்திரம் நடைபெற்றதால் பங்குகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. இதனால் இப்பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட நீண்டகாலம் வேண்டியதில்லை என்ற கருத்து மாணவர்களிடையேயும் பெற்றோரிடையேயும் நிலவுகிறது

வடபகுதி தவிர்ந்த இலங்கையின் ஏனைய இடங்களில் பெறுபேறுகள் கிடைத்து ஒருவருடம் பூர்த்தியடையப்போகிறது விசேட பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாமை பரீட்சைத் திணைக்களத்தின் கவனயீனம் என்று கருத இடமுண்டு.

இத்தாமதம் பல தமிழ் மாணவர்களைப் பாதிக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை ஏனெனில் 1998-ல் நடக்கும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சம்பந்தப்பட்ட மாணவர்கள் உயர்தர வகுப்புக்குரிய பாடங்களைப் பயில வேண்டிய தேவை உண்டு.

1995 இல் சாதாரணதரப் பரீட்சையின் பின்னடைவுகள் 1996 இல் டிசம்பர் பரீட்சைக்கும் இவர்களைத் தோற்ற முடியாது செய்துவிடும்.

இதனைத் தடுப்பதற்கு ஒரே வழி 1995 ஜூலையில் நடந்த பரீட்சை முடிவுகளை உடன் வெளியிடுவது தான். எனவே இவ்விடயத்தில் வட பகுதிக் கல்வித்துறைக்கும்பொறுப்பான கல்வி அதிகாரிகள் கூடிய கவனமெடுப்பது அவசியம். அதன் மூலம் எம்போன்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சி வீழ்ச்சியடையாமல் தடுக்கவும் உதவுவதாக இருக்கும்.

எனவே மாணவர்களின் நலனுக்காக இவ்வுதவியை செய்யுமாறு பொறுப்புள்ள அதிகாரிகளைக்கேட்டுக்கொள்கின்றேன். இக்கருத்தை அவர்கள் கவனத்தில் எடுப்பார்கள் எனவும் நம்புகின்றேன்.

ரி-கே.கே. தரன்.

அச்சுவேலி.

1995 ஜூலையில் நடைபெற்ற க.பொ.த.ப சாதாரண தர விசேட பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாமையால் அப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு உள்ள பாதிப்புகளை எடுத்துச் சொல்லி முடிவுகளை விரைவில் வெளியிடக் கோரும் மேலும் இரண்டு வாசகர் திருமுகங்கள் கிடைத்துள்ளன. இவற்றை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி ச. சித்ராவும், நல்லூரைச் சேர்ந்த மாணவரும் எழுதியுள்ளனர்.

## சுன்னாகம் தபாலகத்தின் நனைந்த கடிதங்கள்!

வாசகர் திருமுகம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் முக்கியமான பெயர்போன இடங்களில் சுன்னாகமும் ஒன்றாகும். அதே போல குடா நாட்டுத் தபாலகங்களில் இரண்டாவது பெரியது சுன்னாகம் தபாலகம்.

கடந்த இராணுவ நடவடிக்கையின் போது பெருமளவில் அது சேதமுற்றது. ஆனால் திருத்தப்படவில்லை. தபாலகக் கட்டடம் திருத்தப்படாமலே அலுவலர்கள் அங்கு பணியாற்றுகிறார்கள்.

மக்களின் முக்கிய தொடர்பு ஊடகமாக விளங்குவது கடிதம். ஆனால் சுன்னாகப் பகுதி மக்களுக்கு வரும் கடிதங்கள் பல சந்தர்ப்பங்களிலும் நனைந்த நிலையில் வருகின்றன. அதனால் கடிதங்களை வாசிக்க முடியாமலும் போவதுண்டு இது தபாலின் நோக்கத்தை மக்கள் அனுபவிக்கத் தடையாக உள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் முத்திரை வாங்குவதற்காகத் தபாலகம் சென்றிருந்தேன். அலுவலகம் முழுவதும் தண்ணீர் நிரம்பி நின்றது அங்கு வேலை செய்பவர்களிடம் இது குறித்துக் கேட்ட போது, ஒருவரும் திருத்தித் தரவில்லை நனைந்து நனைந்து வேலை செய்கிறோம் என்றார்கள்.

இது குறித்து தபால் திணைக்கள உயர் அதிகாரிகள் கவனம் எடுக்கக் கூடாதா?

இணுவில். நா. தாமோதரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அனுமதித்தால் புலிகளுடன் பேசத் தயார்!

## அமரபுர மகாசங்க சபாவின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு ஒக். 13
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுமதி அளித்தால் இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியாக விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக வடக்கே செல்லத் தயாராக இருக்கிறேன்.

ஸ்ரீலங்கா அமரபுர மகா சங்க சபாவின் செயலாளர் நாயகமும், கல்கிசை ஸ்ரீ தர்ம பாலராம விகாரை பிரதம குருவுமான வண கொட்டுகொட தம்மவாஸ அனுநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

12 ஆயிரம் புத்த பிக்குமாரை உறுப்பினர்களாகக் கொண்ட அமரபுர மகா சங்க சபாவின் செயலாளர் நாயகம், விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர முடியும் என்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அரசும் — புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமரபுர மகா சங்க சபா உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைக்கான சில திருத்தங்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்திருக்கும் வண். கொட்டுகொட தம்மவாஸ அனுநாயக்க தேரர், பயங்கரவாதத்தையேயன்றி, அந்தப் பயங்கரவாதத்தைப் புரிபவர்களை அழித்தொழிக்க விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

''எங்களுக்கு அதிகாரம் எதுவும் இல்லை, ஆனால் ஜனாதிபதியின் அனுமதியுடன், அரசாங்க முத்திரையுடன் நாம் பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு அங்கீகாரம் கிடைத்தால் புலிகளை சந்திக்க நாளைக்கே நாம் தயார். அரசியல்வாதிகளுக்குப் பதிலாக அரசைப் பிரதி நிதித்துவப் படுத்த எம்மால் முடியும் என்றும் அவர் கூறினார்.

(இ-3)

### ஐ. நா. அதிகாரிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக். 13
ஐ. நா. அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வர இருக்கிறது.

இருதினங்கள் இங்கு தங்கியிருக்கும் இக்குழுவுக்கு ஐ. நா. அபிவிருத்தி திட்ட கொழும்பு அலுவலக பிரதிநிதி நிற்சேர் ஜேகொன்ரோஸ் தலைமை வகிப்பார்.

குடாநாட்டின் அரச அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகள் ஆகியோரை இக்குழுவினர் சந்திப்பார்கள்- அத்துடன் இங்கு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் குறித்தும் இவர்கள் ஆராய்வார்கள்

(இ-3)

### குடாநாட்டில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடிதம் எழுதி அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முகாம் அதிகாரி கருணாரட்ண தெரிவித்தார் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

### அவசரகால..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவதற்கு முன்னதாக தங்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கத்திடம் சரணடைய விரும்பும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் அவசரகாலச் சட்டத்தின் 22 ஆவது சரத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(இ-10)

### ஐ. தே. கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பதிலாக ஐ தே: கட்சி எம். பிக்கள் யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயார் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அவர்கள் தமது விருப்பப்படி நடமாடி வெளியிடும் செய்திகளையடுத்து, நாம் அங்கு செல்ல தயாராக இருக்கிறோம் என்று ஐ தே. கட்சி எம். பிக்கள் நிபந்தனை விதித்திருக்கின்றனர்.

தமது கட்சி எம். பிக்கள் யாழ்ப்பாணம் செல்லத் தயாராகவிருப்பதையும் — அவர்கள் அதுகுறித்து விதித்துள்ள நிபந்தனையையும் — ஐ. தே. க.பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள நேற்று முன்தினம் தெரிவித்தார். (அ-3)

### வன்னியில் கடும் மழை

வன்னிப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது.

இதனால் இடம்பெயர்ந்து இருக்கும் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (இ-3)

### தட்டுப்பாடு நீங்கியது

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவி வந்த ஒக்சிசன் (பிராணவாயு) தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் 56 ஒக்சிசன் சிலிண்டர்கள் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (இ-173)

## புலிகளிடமுள்ள கைதிகளை விடுவித்து உதவுமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம்

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது உறவினர்களை விடுவிப்பதற்கு மேலும் தீவிரமாகச் செயற்படும்படி 15 பேர் அடங்கிய குழு ஒன்று ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

கைதிகள் பரிமாற்றம் குறித்து விடுதலைப் புலிகள் தபமிடம் முன்வைத்த திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு தமக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என இந்தக் குழு அரசைக் குற்றஞ் சாட்டி உள்ளது.

கைதிகள் பரிமாற்றம் குறித்து விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைகளை நடத்தத் தயாராக இருக்கிறார்கள் என விடுதலைப் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் தங்கள் குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து தமக்குத் தெரிய வந்திருப்பதாக இக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் பற்றிப் பேசுவதற்காக அரச உயர் அதிகாரி ஒருவரைச் சந்திப்பதற்கு தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும் ஆனால் இதுவரை வெற்றி கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர் என்று பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-10)

## சோலைவரி அறவிடுவதை நிறுத்தி வைக்க யோசனை

### யாழ். மாநகரசபைப் பகுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 13
யாழ். மாநகர சபைப் பகுதியில் 94 ஆம் ஆண்டு முதல் 96 ஆம் ஆண்டு வரையிலான சோலைவரியை அறவிடுவதை நிறுத்தி வைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் காலப் பகுதிகளுக்கு சோலை வரி அறவிடப்படுவது முற்றாக நீக்கப்படும் சாத்தியம் ஏற்பட்டிருப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

இக்காலகட்டத்தில் மக்கள் அழிவுகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளானார்கள் என்றும் — பெரும் கஷ்ட நிலையில் வாழ்ந்த மக்களிடம் சோலை வரி அறவிடுவதை முழுமையாக நீக்கவேண்டும் என்றும் — வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரிடம் யாழ். மாநகர ஆணையாளர் கோரியிருந்தார்.

97 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குக் குறைந்த வீதத்தை அறவிடுவது தொடர்பாக பரிசீலிக்கப்படுவதாகவும் மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

### மரணதண்டனை வழங்க அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஒக். 13
நாட்டில் பரவலாக இடம் பெற்றுவரும் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போர், சட்ட விரோதமாக ஆயுதங்களைப் பயன்படுத்துவோர் ஆகியோருக்கு மரண தண்டனை வழங்க வசதியாக சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் என 'லங்காதீப' நாளிதழ் தெரிவிக்கிறது. (இ-10)

### அதிபர்களின் சம்பள நிலுவை

திருகோணமலை, ஒக். 13
வடக்கு - கிழக்கில் உள்ள அதிபர்களின் 95 ஆம் ஆண்டுக்கான சம்பள நிலுவையில் இரு மாதங்களுக்குரிய நிலுவை இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவிருப்பதாக மாகாண கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலுவையை வழங்கத் தேவையான நிதி கிடைத்ததும் மிகுதி நிலுவை தொடர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது

## விளையாட்டரங்கு

### தோல்வியின் விளிம்பில் ஆஸ்திரேலிய அணி!

புதுடில்லி, ஒக் 13
புதுடில்லியில் நடைபெறும் இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான ரெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3 ஆவது நாளான நேற்று தனது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இந்தியா 361 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்திய அணியின் விக்கெட் கீப்பர் நயின் மொங்கியா 152 ஓட்டங்களை எடுத்தார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 179 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி ஆட்ட நேர இறுதியில் 6 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க மேலும் 11 ஓட்டங்களை ஆஸ்திரேலிய அணி பெறவேண்டும். 6 முன்னணி ஆட்டக்காரர்களை ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே இழந்துள்ளதால் அதனால் தோல்வியைத் தடுப்பது கடினமாகும்.

இந்திய அணிக்கு கப்டனாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஒரு நாள் போட்டிகளில் அடுத்தடுத்துத் தோல்விகளைச் சந்தித்த டென்டுல்காருக்கு இந்த வெற்றி மனத் தெம்பை அளிக்கும். மேலும் தனது தலைமையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே இந்திய அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தவர் என்ற பெருமையும் டென்டுல்காருக்குக் கிட்டும்.

இத்த ரெஸ்ட் பந்தயத்தில் இந்திய அணியின் விக்கெட் கீப்பரான நயின் மொங்கியா கடந்த 3 நாள்களில் சுமார் 17 மணித்தியாலங்கள் துடுப்பெடுத்தாடியும், விக்கெட் கீப்பராகவும் மைதானத்தில் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)


புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. வீதி, கொக்குவில்.

வினா விடை வகுப்பு

A/L 97

பௌதிகம் — ஜெயசீலன்

ஆரம்பம்: 14 10-1996 திங்கள் 4-30மணி

குறிப்பு:- விவரங்களைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(43175)

தமிழ் - ஆங்கில தட்டச்சு மற்றும் றோணியோ வேலைகளுக்கு

அருண்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மரண அறிவித்தல் 2 ஆம்பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 298 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 13-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org